Koviloor Digital Library

குருபக்தி யோகம்.



ஆசிரியர் :
ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி



மொழிபெயர்ப்பாளர் :
கி. வானமாமலை

Koviloor Digital Library

Published by:
Sri SWAMI CHIDANANDA
For
THE YOGA VEDANTA FOREST ACADEMY

73 rd Sivananda-Jayanti Series No: 2

First Edition:

8th September, 1959,
the holy day of the 73rd
Birthday of His Holiness
Sri Swami Sivananda Sarasvatiji Maharaj

சமர்ப்பணம்

ஜகத்குரு, மகாமண்டலேசுவரர், "இமயஜோதி" ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹராஜ் அவர்களின் 73-வது பிறந்த நாள் புனிதத்தினமாகிய (8-9-'59) பொன்னுளன்று சத்குருவின் பாதார விந்தங்களில் இந்நூல் சமர்ப்பணம்,

கி. வானமாமலை,

(All rights reserved)

Price 25 nP.

Printed at Ganthimathi Press, Tirunelveli Jn.

Koviloor Digital Library

Foreword



The evils that are rampant in modern society to-day are largely attributable to the neglect of this important factor in the up-bringing of our youth. They have not been taught to revere their elders; they have no idea of Guru - Bhakti. They are strangers to the Upanishadic admonition: " Acharya Devo Bhava ".

Anyone who teaches you any Vidya is a Guru. He is God Himself, come to teach you and elevate you. Bear this in mind. Revere your teachers. Then and then alone will the learning be fruitful

May God bless Sri Vanamamalai for giving Tamil - Nad this precious knowledge in Tamil.

May God bless you all!

Swami Sivananda

Koviloor Digital Library

பொருளடக்கம்.



1. குருபக்தி யோகம்.
2. குருவும் சீடனும்.
3. குருவும் தீக்ஷையும்.
4. குருபக்தியும் குருத்துரோகமும்!
5. குருபக்தியின் அங்கங்கள்.
6. குருபக்தியும் கீதையும்.
7. குருபக்தியின் பிரபாவம்!
8. உபமன்யுவின் குருபக்தி!
9. மகாகுருவின் மணிமொழிகள்.

ஏன் இந்தச் சீரழிவு?

இன்றையச் சமுதாயத்தில் நிலவும் அதிகமான தீமைகளுக்கும் காரணம் நம் இளைஞர்களைத் தயாரிப்பதில் அதிமுக்கியமான பண்பாகிய குருபக்தியைப் புறக்கணிப்பதேயாகும். தம்மில் மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு அவர்கள் போதிக்கப்படவில்லை. குருபக்தி என்றால் என்ன என்பதை அவர்கள் அறியார்!

— சிவ.

Koviloor Digital Library



1. குருபக்தி யோகம்.



உலகத்து மக்கள் ஒவ்வொருவருடையவும் வாழ்க்கையில் ஒரு குரு இன்றியமையாது வேண்டப்படுகிறார். "கடவுளே என் குரு", அல்லது "நானே என் குரு", என்று நீங்கள் நவிலலாம். ஆரம்ப நிலைகளில் சாதகன் தனது பாதையில் பற்பல கஷ்டங்களையும் சந்தேகங்களையும் எதிரிட வேண்டிய நிலையில் இருக்கிறான். சந்தேகங்களைத் தெளிவிக்க யாராவது ஒருவர் அவனுக்கு மிகவும் தேவை.

குருவைத் தேர்ந்தெடுப்பதில் நீங்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஒரு பெரிய மகாத்மா என்ற தவறான கருத்துக்கொண்டு யார்பின்னாவது நீங்கள் செல்லக்கூடும். உடனே குதித்து, ஒருவரை உங்கள் குருவாகக்கொண்டு விடாதீர்கள். ஏன்? ஒருவரைக் குருவாகக்கொண்டபின் அவரை விடுத்து மற்றொருவரைக் குருவாகக்கொள்வது முறையன்று. எனவே மஹாத்மாக்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய சத்சங்கத்தில் சில காலம் இருந்த பிறகு, அவர்களுள் சிறந்த

Koviloor Digital Library

வரை உங்கள் குருவாக ஒப்புக்கொள்வதே சாலச் சிறந்தது. இங்ஙனம் செய்வதில் இனியொரு வீழ்ச்சி யையும் நீங்கள் தவிர்க்க முற்பட வேண்டும். ஒரு மகாத்மா ராம பக்தியே சிறந்தது என்பார். மற்ருெருவர் கிருஷ்ண பக்தியே சிறப்புடையது என்பதோடு ராம பக்தியைக் குறைவாகப் பேசவும் முற்படுவார். நீங்கள் கல்கத்தாவுக்குச் சென்ருல், ஒரு மகாத்மா காளி பக்தியைப்பற்றியே பிரமாதமாகப் பேசுவதைக் கேட்கும் அதே சமயத்தில் மற்ருெருவர் நிராகாரத்தியானத்தைப் பெரிதாகக் கூறுவதையும் நீங்கள் கேட்கலாம். **நீங்கள் உங்கள் லட்சியத்தை ஒருபொழுதும் மாற்றக்கூடாது.** ஒவ்வொரு மனிதனுடையவும் சுபாவ விசேஷங்களுக்கு ஏற்ப நிஷ்டை மாறுவதால், நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான லட்சியத்தைச் சிரமேற்கொண்டு, நீங்கள் சந்திக்கும் மகாத்மாக்களிடம் அதே பொருளைப்பற்றிப் போதிக்க வேண்டுங்கள். அவர் உங்கள் கருத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயங் களைத் தெரிவிப்பாராளுல் அதையும் பொறுமையுடன் கேளுங்கள்; ஆனுல் உங்கள் லட்சியத்தை மாற்ருது அதில் உறுதியுடன் நில்லுங்கள்.

இவற்ருல், ஒவ்வொரு சாதகனுக்கும் ஒரு குரு மிகவும் தேவை என்பது புலனுகிறது. முதன் முதலாக ஒரு மொழியிலுள்ள எழுத்துக்களையோ, அல்லது கணி தத்தையோ கற்பதற்குக்கூட ஒரு குருவின் தேவை அவசியமாகிறது. இந்த நிலையில், பிரம்ம ஞானத்தைப் பெறும் விஷயத்தைக் கூறவா வேண்டும்? **சத்குரு தான் உங்களிடமுள்ள குற்றம் குறைகளைக் கண்டுபிடிக்கும் தகுதியுள்ளவர்.** உங்களிடமுள்ள

Koviloor Digital Library

ஆணவத்தினுல் நீங்கள் உங்கள் குறைகளைக் கண்டு பிடிக்கும் தகுதியை இழந்து விடுகிறீர்கள். "மற்றவனை விட எனக்கு நன்ருகத் தெரியும்!", என்று நீங்கள் கூறு வீர்கள். உங்கள் குறைகளைக் குத்திக் காட்டினுலோ நீங்கள் சண்டைக்குத் தயாராகி விடுவீர்கள். குறைகள் வெளிப்படுவதை நீங்கள் விரும்புவதில்லை. குற்றங்களை ஒப்புக்கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் திருந்து வீர்கள்.

ஆத்மீகப் பாதை முட்கள் நிறைந்தது. ஆனுல் அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். கருணையே வடிவானவர் கடவுள். அவருடன் ஒன்ருக வேண்டின், நீங்களும் கருணையுடன் விளங்க வேண்டும். ஆத்மானுபூதி என்பது எது? உங்களைக் கடவுளில் கரைத்து விடுதல் அல்லது அவருடன் ஒன்ருதலே ஆத்மானுபூதி எனப்படும். மறை நூல்கள், சாங்கியம், யோகம், எல்லாவற்றினுடையவும் நோக்கம் உங்களைப் பூரணமாக்கி, விடுதலையடையச் செய்து, பரமாத்ம னுடன் உங்கள் ஜீவாத்மனை ஒன்றுபடுத்தி, பிரம்ம ஞானத்தை நீங்கள் பெற வகை செய்து அதன்மூலம் ஆனந்தம், சாந்தியை அடைய வழிகோலுவதேயாகும்.

"சிரத்தை மிகுந்தவன், புலன்களை வென்றவன், ஞானத்தைப் பெறுகிருன்; ஞானத்தைப்பெற்று உட னேயே உயரியசாந்தியை அடைகிருன்!" (கீதை: IV-39)

சிறிதாவது அனுபவத்தைப் பெருத நிலையில் நீங்கள் சிரத்தையை இழக்க நேரிடும். உண்மைச் சாத கன் மனச் சோர்வடையமாட்டான். புவியின்மீதுள்ள கடவுளே நீங்கள் அனுபவம் சிறிதும் கிடைக்காத

Koviloor Digital Library

நிலையில் நீங்கள் ஏங்கக்கூடாது. நேராகவே உங்களுக்கு உயரிய அனுபவத்தைத்தரக் கடவுள் இஷ்டப் பட்டுக்கொண்டிருக்கலாம்.

"வினையாற்றுவதே உனது கடமை. ஆனால் வினைப் பயனில் ஒருபொழுதும் உரிமை பாராட்டதே. வினைப் பயனை நோக்காகக்கொள்ளாதே. சும்மா இருப்பதில் விருப்பம் கொள்ளாதே." (கீதை II-47)

அனுபவங்களை நீங்கள் பெறவில்லை என்றால் காத் திருங்கள். இன்னும் உங்களிடம் சில அழுக்குகள் இருக்கலாம். அதிகமான சாதனையில் நீங்கள் ஈடுபட வேண்டும். பாவத்துடன் தன்னலமற்ற தொண்டில் ஈடுபடுங்கள். ஏதோ கொஞ்சம் சாதனை செய்த உடனேயே அதன் பலனை எதிர்பார்க்காதீர்கள். "நான் மனித சரீரத்திற்கு வீசவில்லை; கடவுளுக்கே வீசுகிறேன்!" என்று, குருவுக்கு வீசும்பொழுதெல் லாம் எண்ணுங்கள். அங்ஙனம் எண்ணும்போது 'தான் மேல்' என்ற எண்ணம் எரிந்துபோகும். ஒரு நீதிபதி ஆசிரமத்திற்கு வந்தால் அவர் ஒரு வேலையும் செய்ய மாட்டார். அவர் கர்வமும் ஆணவமும் ஒருங்கே அமைந்தவர். ஆதலால், தொண்டுசெய்ய முன்வருவ தில்லை. ஆனால், ஒரு பக்தன் வந்தால், பிறர் சொல்வ தற்கு முன்னதாகவே தானாக முன்வந்து சேவைகளைச் செய்வதில் அவன் முனைந்து நிற்பதை நீங்கள் காண லாம்.

"நான் ஆத்மானுபூதியை அடைந்து விட்டேன்" என நினைக்காதீர்கள். இது வெறும் தவறான கருத்து. மாணவனின் மாணவனாகுங்கள். ஆத்மீகத்தன்மை ஒரு

Koviloor Digital Library

பெருங்கடல். மகாத்மாக்களின் வாழ்க்கைச் சரிதங்களில் நீங்கள் இவ்வுண்மையைத் தெளிவுறக் காண்பீர்கள். சைதன்னியர். துக்காராம், துளஸிதாஸ்மோன்ற மகாத் மாக்கள் அனைவரும் தங்களை மாணவர்களாகவே கருதினர்.

ஆத்மீக வழியில் நீங்கள் எலும்பு ஒடியப் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் கடவுள் உங்கள் முன் பிரசன்னமாவார். ஆனால், அதைரியமடையாதீர்கள். ஜனகரைப்போல் ஒரே வினடியில் அல்லது கட்வாங்க ரைப் போல் ஒரு முகூர்த்தத்தில் அல்லது பரீக்ஷித்தைப் போல் ஒரு வாரத்தில் ஆத்மானுபூதி தோன்றி நிற்கும். முன்னூறு பிறவிகட்குப் பிறகுகூட அது வரட்டுமே! இதனல் உங்களுக்கென்னவாம்? ! உங்கள் கடமையைச் சரிவரச் செய்து வாருங்கள். சேவை செய்யாமல், சாதனையில் ஈடுபடாமல் நீங்கள் உடனேயே அமர பதவியை எதிர்பார்க்கிறீர்கள். நூறு ரூபாய் சம்பாதிப்பதற்கு, ஒரு ஹெட் கிளார்க் ஆவதற்கு, பதினைந்து வருடங்கள் படித்தபின் பத்து வருடங்கள் வேலை செய்யவேண்டிய திருக்கிறதே! உங்கள் லட்சியத்தின் தன்மை என்ன? அமர பதவி· இதைப் பெற நீங்கள் அரும் பாடுபட வேண்டாமா? 'எண்ணிறந்த பிறவிகளைப்பற்றியும் நான் அஞ்சப்போவதில்லை,'' என்று கூறுங்கள். அந்த எண்ணம் வந்தால்தால் நீங்கள் உண்மைச் சாதகன் என்பது தெரிய வரும்.

கர்வத்தை அடக்கி நிறுத்துங்கள். விபூதி யோகத்தை அப்பியசியுங்கள். வெளியே செல்வதற்கு உங்களுக்கோர் மோட்டார்கார் வேண்டி யிருகிக்றது; அனுபவிப்பதற்குப் பற்பல விதப் படா

Koviloor Digital Library

டோபப்பொருள்கள் தேவையிருக்கின்றன. கந்தல்துணியைக் கட்டிக்கொண்டு நடந்தால் நீங்கள் பணிவுடன் நடக்கிறீர்கள். சமபாவத்தைக்கொண்டு விளங்குங்கள். இங்குள்ளதோர் மகாத்மாவுக்கு நீங்கள் பணிவிடை செய்தால் அதுவொரு ஆத்மீகத் தொண்டாகிறது. "நான் கடவுளுக்குத் தொண்டு செய்கிறேன்", என எண்ணுங்கள். அனைவரிடத்திலும் ஆண்டவனைக் காணுங்கள். மறை நூல்கள் எல்லாவற்றிலும், பாகவதத்திலும் இதே கருத்துத்தான் பன்முறை தெரிவிக்கப் பட்டுள்ளது. "எல்லா ஜீவர்களிலும் உறைந்து நிற்கும் அந்தத் தேவியை நான் நமஸ்கரிக்கிறேன்" என்று தேவி சூக்தத்திலும் கூறப்படுகிறது.

ஆனால் நீங்கள் இவற்றையெல்லாம் மறந்து விடுவீர்கள். இது மாயையின் விளைவு. முதன் முதலாக நீங்கள் ஆணவத்தின் தன்மையை நன்கு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அதைத் தன்னலமற்ற தொண்டினால் வெற்றிபெற முயலுங்கள். உங்களிடம் நற்பண்புகள் அமைந்திருந்தால் ஊரார் அனைவரும் உங்களுக்கு மரியாதை செலுத்துவர். ஆனால் கர்மயோகி அல்லது பக்தியோகி என்று தன்னைத்தான் தம்பட்டமடிக்காதீர்கள். நீங்கள் தொண்டு செய்யும் போது உங்களிடம் உண்மை உள்ளம் நிலவுகிறதா என்பதை சத்குரு உற்றுநோக்குவார். உண்மைப் பக்தனின் கண்கள் சதா திறந்த வண்ணம் இருக்கும். அவன் தொண்டு செய்வதற்கான வாய்ப்பை எதிர் நோக்கி நிற்பான். உங்களிடம் அரைச்சேர் பால் இருந்தால், அதில் சிறிதைப் பட்டினி கிடப்பவனுக்குக் கொடுங்கள். நீங்கள்தான் கொடுக்கமாட்டீர்களே! ஒவ்வொருவரும் தங்கள் வயிற்றை நிரப்ப முயற்சிக்கின்

Koviloor Digital Library

றனர். கருணையை வளர்க்க ஒரு பக்தன் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவான். "இதற்குமுன் நான் இவனைத் தாழ்ந்தவன் என எண்ணியிருந்தேன். இப்பொழுது அவன் கடவுளைத் தவிர மற்றொருவருமில்லை என்பதை நான் உணர்ந்தேன். அவனுக்குச் சிறிதளவு துன்பமும் கொடுத்தல் தகாத செயல். வாதத்தினுல் அவதிப்படும் அவனது கால்களை நானே மெதுவாகப்பிடித்து விடவேண்டும்", என்ற இரக்க சிந்தனையுடன் பிணியாளர்களின் தொண்டில் அவன் ஈடுபடுவான். தனக்குள் அவன் கண்ணீர் வடிப்பான். இவைகளே கர்மயோகி அல்லது பக்தனின் அறிகுறிகள். தியானத்திலும் சமாதியிலும் துறவிகள்காணும் அதே கடவுளைப் பக்தன் அல்லது கர்மயோகி எங்கும் காண்கிருன். அவனுக்கு அத்துவித அனுபவம் தானுகவே ஏற்படுகிறது; வேதாந்தநூல்களைக் கற்காமலேயே உண்மைகள் அவனுக்கு நன்கு புலப்படுகின்றன.

"விசுவரூபத்தைக் கொண்ட உலகநாயகனே! எண்ணிறந்த கைகள், வயிறுகள், முகங்கள், கண்கள் இவற்றை உடைய முதல் நடு முடிவற்ற உமது அலகில்லா உருவத்தை நான் எங்கும் பார்க்கிறேன்"
(கீதை XI-16)

கால்கள், கைகள் எல்லாம் கடவுளுடையவைகள். நீங்கள் காண்பதெல்லாம் கடவுளே. இதைத் தொடர்ந்து உணருங்கள். மனிதனின் வளர்ச்சிக்கு, ஒழுக்கத்திற்கு கர்மயோகம் மிகவும் அவசியம். எனவேதான் சம்பூர்ண யோகத்தை நான் வலியுறுத்தி வருகிறேன். ஒரு "எம். எஸ்ஸி." அல்லது "பி. எச். டி." யால் இவ்வரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடி

Koviloor Digital Library

யாது. அவன் அறிவாளிமட்டுமே யாவான். வேதாந்தத்தை நீங்கள் படிப்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் ராகத்துவேஷத்தைக் கர்மயோகத்தினலேயே நீங்கள் அகற்ற முடியும். அப்பொழுதுதான் தியானம் நன்கு அமையவரும். குருவின் போதனைகளின்படிச் சரிவர நடப்பதாலும், தன்னலமற்ற தொண்டாலுமே நீங்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கமுடியும் நான் சொல்லும் விஷயங்களை நீங்கள் பின்பற்றவேண்டும். எந்தவிதச் சேவையையும் நீங்கள் செய்யத் தயங்கக்கூடாது. இழிந்த ஜோலி எனும் எண்ணத்தைக் கைவிடுங்கள். கர்மயோகத்தில் இழிந்த ஜோலி என்பது கிடையாது. கர்மயோகிக்கு வேலையே வழிபாடாக அமைகிறது. எந்த வித ஜோலியும் உயர்ந்தது, உயர்த்துவது, தூய்மைப் படுத்துவது. பெரும் உத்தியோகஸ்தர்களும், வயதான சன்னியாசிகளும், ஆனந்தகுடீரில் நடந்த நடைமுறைக் கர்மயோக வகுப்பில் சாக்கடைகளைச் சுத்தப்படுத்தி, சாணகத்தை வாரித்தெருக்களைப்பெருக்கினர்! இவ்வெல்லாவேலைகளிலும் நானும் அவர்களுடன் பங்கெடுத்துக் கொண்டேன். இந்த மாதிரியான தொண்டுகள் கடவுளுக்கு மிகவுப் பிடித்தமானவை. கர்வத்தையும், வீணத்தனத்தையும், தப்பெண்ணங்களை ம், தான்மேல் என்ற எண்ணத்தையும் இல்லாதாக்க இதுவே சிறந்த வழி. விசுவநாதர் ஆலயம் கட்டப்பெற்ற நேரத்தில் கூலிகளுடன் நானும் கூடை கூடையாக மண்ணைத் தலையில் சுமந்து சென்றதுண்டு. இங்கிலாந்தில் ஒரு தடவை காந்திஜி சொற்பொழிவாற்ற ஓரிடத்திற்குச் சென்றிருந்தார். அவர் எளிய உடை அணிந்திருந்தார். மக்கள் அவரிடம் காய்கறி நறுக்கவும், தண்ணீர் எடுத்துவிடவும் கூறினர். அவர் மனமுவந்து அவ்

Koviloor Digital Library

தைப் பெற்றார். பாகவத புராணத்தின் பதினொன்றாவது ஸ்கந்தத்திலுள்ள விளக்கப்பிரகாரமுள்ள இருபத்தி நான்கு குருமார்களிடமிருந்தும் தத்தாத்திரேயர் பிரம்ம ஞானத்தைப்பெற்றார். செல்வம், மங்கையிடமுள்ள அதிகமான பற்றுதலின் காரணமாகச் சில சாதகர்கள் துறவுபூண்டுள்ளனர். அவந்தியைச்சார்ந்த பிராம்மண னின்கதையும், வீரமங்களின் வாழ்க்கையும் இந்தக் கூற்றைச் சிறப்புற விளக்குகின்றன.

" என்னை அடையக்கூடியதான புத்தி யோகத்தை நான் அவர்களுக்கு அருளுவேன் ", என்று பகவான் கீதையில் தெரிவித்துள்ளார். தம்மிடம் அமைந்திருந்த கூரிய புத்தியால் தத்தாத்திரேயர் ஞானத்தைப்பெற்றார். ஜடபரதர் பிறவிச்சித்தர். தமது குருவிடமிருந்து தீக்ஷை பெறுவதன் முன் இந்திரன் பிரஜாபதிக்கு 101 வருடங் கள் சேவை செய்யலானான். தமது அரச தர்பாரிலேயே யாஜ்ஞவல்க்யர், அஷ்டாவக்ரர் எனும் இருபெரும் முனி வர்களிடமிருந்து ஜனகர் தீக்ஷை பெற்றார். தமது தந் தையாகிய உத்தாலக முனிவரால் சுவேதகேது ஒன்பது தடவைகள் தீக்ஷையளிக்கப்பட்டார். திரயம்பகேசு வரத்தில் நிவிருத்திநாதரை ஒரு வேங்கைப் புலி தாக்க முயன்றது. உடனே அவர் ஞானநாதரின் குகையினுள் புகுந்தார். மத்ஸ்யேந்திரநாதரின் சீடரான ஞானி நாதர் அவரை யோகத்தின் அற்புதத் தன்மைகளில் தீக்ஷை அளித்தார்.

தீக்ஷை, உள்ளுணர்வு, ஞானப்பிராப்தி மூன்றும் சாதகனின் சுய முயற்சியையும், ஊக்கத் தையும் பொறுத்தே அமைகின்றன. ஆத்மானு

Koviloor Digital Library

பூதிக்கான பெரும் முயற்சி மேலும் தேவையில்லை என்ற நிலை ஏற்படும் நேரத்தில் பகவானின் திருவருள் சாதகனிடம் தோன்றி நிற்கிறது.

யோகி மிளிரப்பனைப் போன்றுச் சிலர் வெகு கால குரு சேவையாலும், மற்றும் சிலர் மின்னல் வேகத்திலும் தீக்ஷையைப் பெற்றுள்ளனர்; இது சாதகனின் ஆத்மீக சாதனையையும், சாதகனின் மனோ வளர்ச்சியையும் பொறுத்தது. தனது குரு சேவையில் யோகி மிளிரப்பன் பற்பல இன்னல்களை அடைந்தான். மனித சக்திக்கு அப்பாற்பட்ட வீரதீரச்செயல்களைத் தீட்சை பெறும் முன் அவன் செய்யவேண்டியதிருந்தது.

முற்கால ரிஷி முனிவர்கள் தங்கள் சீடர்களைப் பல வகையிலும் சோதனை செய்தபின்பே அவர்களுக்கு தீக்ஷை அளிக்க முன்வந்துள்ளனர். உள்ளுணர்வினால் தீக்ஷைபெறுவதற்கு ஒரு மாணவன் தகுதியுள்ளவனா என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்களைப் பசுக்களை மேய்ப்பதிலும், குருவின் உடைகளைத் தோய்த்துக்கட்டுவதிலும், இன்னும் இவைபோன்ற காரியங்களில் ஈடுபடுத்தியும் வந்தனர். இம்மாதிரி ஜோலிகள் தற்கால சாதகர்களுக்கு மிக்க இழிவாகத் தோன்றுகிறது. சுவேதகேது, இந்திரன், சத்தியகாமன், போன்ற சாதகர்கள் மற்றும் பலருக்கும் ஒவ்வொரு செய்கையும் யோகத்தின் ஒரு செயலாக, குரு வழிபாடாக அமைந்திருந்தது. அவர்களுக்கு ஒன்றுமே இழிவாகத் தோன்றவில்லை. அவர்கள் எல்லாவற்றையும், தன்னலமற்ற நோக்கத்துடன், தங்கள் குருமார்களுக்கு அர்ப்பணம் செய்தனர்.

Koviloor Digital Library

ஆதலால், அவர்கள் எளிதிலே சித்த சுத்தியைப் பெற்று, வேதங்களைக் கற்றுத் தேர்ச்சிபெற்று, முடிவில் பரமாத்ம ஞானத்தையும் பெற்றுவிளங்கினர்.

நானூறு இளைத்துப்போன பசுக்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து அவைகளைக் கொண்டுபோய் நன்கு மேய்த்து, ஆயிரம் பசுக்கள் ஆன பிறகே திரும்பி வரவேண்டும் என்று கௌதமர் தமது சீடனை சத்தியகாம ஜாபாலனிடம் கட்டளையிட்டார். சத்தியகாமன் காட்டில் வெகு காலம் வசித்து வந்தான். குருவின் ஆசிரமத்திற்குத் திரும்பிப் புறப்படுவதற்குச் சின்னாள் முன்னால், வாயு, அக்கினி, சூரியன் முதலான தேவர்கள் சத்யகாமனுக்குப் பிரம்ம ஞானத்தை உபதேசித்தருளினர். ஆசிரமத்திற்குத் திரும்பிவந்த சத்யகாமனின் முகத்தில் பிரம்ம தேஜஸ் ஜொலிப்பதைக் கண்ட கௌதர் அதிசயித்து நின்றார்.

கண்மூடி திறப்பதற்குள் அஷ்டாவக்ரர் ராஜா ஜனகருக்குத் தீக்ஷை அளித்தார். ஒரு முகூர்த்தத்திற்குள் தேவர்கள் கட்வாங்கருக்கு தீக்ஷை அளித்தனர். சிலர் வெறும் பார்வையாலேயே சீடர்களுக்கு ஞானத்தைப் போதிக்கின்றனர். ஸ்ரீ சங்கரர் தமது சங்கல்பத்தினாலேயே தோடகருக்கு ஞானத்தை ஊட்டினார். எனவே, பரம சந்தோஷம், பேரானந்தம் முதலிய அதியுயரமான சிகரங்களுக்கு உயர்த்தும் தெய்வீகத் திருவருளைப்பெறுவது சாதகனிடமுள்ள திறமை, தகுதி, தூய்மை முதலியவற்றைப் பொறுத்திருக்கிறது.

எந்த இடத்திலிருந்தும் வரும் ஆத்மீக போதனைகளைப் பெறுவதற்குச் சாதகன் சதா விழிப்புத் தன்மை

Koviloor Digital Library

யுடனிருக்கவேண்டும். அறியாமையை அகற்ற உதவும் எவனும் ஒரு வழிகாட்டியாவான். ஆனல் சாதகனின் ஆத்மீக முன்னேற்றத்தை ஊக்கிவிடுவதுடன், அவனது வளர்ச்சியில் மிக்க சிரத்தை கொள்ளும் ஒருவனே உண்மையான சத்குரு. அசேதனப் பொருள்களிடமிருந்துகூட தத்தாத்திரேயர் ஆத்ம ஞானத்தைப் பெற்ருர். குருவின் திருவருளை விரும்பும் முன்னதாகச் சாதகன் அதைப்பெறத் தகுதியுடையவனுக விளங்கவேண்டும். உண்மையான வேட்கையும், பெறுவதற்கான தகுதியும் உள்ள சாதகனிடத்தில்தான் தெய்வீகத் திருவருள் தோன்றிநிற்கிறது.

ஸ்ரீ சங்கரர், மதுசூதனசரஸ்வதி போன்ற சீரிய துறவிகளால் ஒரு சாதகனை அவன் எந்தப் பாதைக்குத் தகுதியுள்ளவனே அதே பாதையில் இட்டுச்செல்ல முடியும். சாதகனை நன்கு நெருங்கி அவனது அபிருசிகள், சுபாவங்கள், தகுதிகள் முதலியவற்றை நன்கு தெரிந்து பின்னர் குருவானவர் அவனைப் பல வருடங்கள் தன்னலமற்ற தொண்டில் ஈடுபடப் பணிக்கிருர். அங்ஙனம் தொண்டு செய்துவரும் நிலையிலேயே அவன் எந்தக் குறிப்பிட்ட பாதை வழிச்செல்லத் தகுதியுடையவன் என்பதைக்கண்டு பிடித்து அதேவழியில் தீக்ஷை அளிக்கின்ருர்.

பக்தி மார்க்கத்தில் ஒரு பக்தனுக்கு மற்ருெரு சீரிய பக்தர் தீக்ஷை அளிக்கிருர். வேதாந்த மாணவனுக்கு மகாவாக்கியங்களில் ஞானியொருவர் தீக்ஷை அளிக்

Koviloor Digital Library

கிருர். ஒரு ஹடயோகி, அல்லது ராஜயோகியால் அந்த மார்க்கத்திலுள்ளவர்களுக்குத் தீக்ஷை அளிக்கமுடியும். ஆனுல் பூரண ஆத்மானுபூதிபெற்ற முனிவர் அல்லது பூர்ண ஞானி அல்லது பூர்ண யோகியால் எந்த மார்க்கத்திலும் தீக்ஷை அளிக்கமுடியும்.

ஒரு பக்த மகாத்மாவை ஞான வழிச்செல்ல எண்ணும் சாதகன் சந்தித்தால், சாதகனை அவர் ஞான வழி நிற்கும் ஒரு குருவினிடம் அழைத்துச் செல்வார். ஏன் ? அந்த பக்தரிடம் ஒற்றுமையின் வேதாந்த உணர்வு கிடையாது. அதே சமயம் ஞானியிடம் பக்தி வழிச் சாதகன் சென்ருல், அவரால் அவனுக்கு தீக்ஷை அளிக்க முடியும். ஏன்? அவர் சகுணவழிபாட்டின் பலன்களை இந்த ஜன்மத்திலோ அல்லது முந்திய ஜன்மங்களிலோ அனுபவித்துள்ளார்.

எந்த யோகத்தைக் கைக்கொண்டு குரு பூரணத்துவத்தை அடைந்தார் என்பதைத் தெரிவது கஷ்டம். ஆனுல் கருணையுள்ளம் பூண்டு குருவாகவே அந்த ரகசியத்தைத் தெரிவித்தால் தான் சாதகன் தெரிந்து கொள்ளமுடியும். எந்தச் சாதகனும் குருவினிடம் இந்தக் கேள்வியைக் கேட்கும் துணிவைக் கொள்ள மாட்டான். அங்ஙனம் கேட்டால் அது அவனிடமுள்ள பணிவின்மையைத் தான் வெளிப்படுத்தும்.

முதிர்ந்த சாதகர்களைத் தவிர, மற்றவர்களுக்கெல்லாம் நீண்ட நாள் பொறுமையான குரு சேவையின் பிறகே தீக்ஷை பெறும் வாய்ப்புக் கிடைக்கிறது. குருவும் சிடனும் ஒருவரையொருவர் நன்கு தெரிந்திருக்க வேண்டும். குருவின் கருத்துக்களையும் கொள்கைகளையும்

Koviloor Digital Library

மாணவன் நன்கு தெரிந்திருப்பதுடன், குருவும் சீட னிடமுள்ள குற்றம் குறைகளையும் தெரிந்துகொள்ளும் தகுதியைப்பெற்றிருக்க வேண்டும். சாதகனின் அந்த ரங்க நிலையை நன்கு தெரிந்துகொள்ளக் குரு அனு மதிக்கப்படவேண்டும். குருவினிடம் சீடன் தனது குறைகளையும் தவறுகளையும் ஒளிக்காது தெரியப்படுத்த வேண்டும். பலவிதங்களிலும் குரு தன்னைச் சோதிப் பதற்கு இடம் கொடுத்து நிற்கும் சீடனிடம் குருவுக்குப் போகப் போகப் பூரண நம்பிக்கை ஏற்படுகிறது.

சேவை செய்யும் காலத்தில் குருவுடன் மிக நெருங் கிய முறையில் சீடன் நின்றுவருவதுடன் அவரிடமுள்ள நற்பண்புகளைத் தானும் கொண்டு விளங்க முற்பட வேண்ம். குருவினிடம் குறை காணும் குறுகிய நோக் கத்திற்கு மறந்தும் அவன் இரையாகிவிடக்கூடாது. குருவினிடம் குறைகாணும் சீடனுல் குருவினிடமிருந்து ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது என்பதோடல்லா மல், அவனது ஆத்மீக முன்னேற்றமும் தடைப்பட்டு விடும். தன்னிடமுள்ள குறைகளையும் தனக்கு நேரிடும் கஷ்ட நஷ்டங்களையும் குருவினிடம் கூற முற்படும் சாதகனை தடுத்தாட்கொள்ள முனைகிருர் சத்குரு.

மனித உருவத்திலுள்ள பிரம்மா, விஷ்ணு, மஹேசு வரனே சத்குரு. புறத்துறுப்பைக்கொண்டு அவரைச் சாதாரண மனிதனுக எண்ணிவிடாதீர்கள். பக்திச் சிரத்தையுடன் குருவை வழிபட்டால், தீக்ஷையும், ஆத்மானுபூதியும் கண்மூடித் திறப்பதற்குள் கிட்டு மென்பதுறுதி.

Koviloor Digital Library

ஆத்மானுபூதிபெற்ற சத்குரு இல்லாத நிலையில், பல காலம் ஆத்மீகப் பாதையில் பாடுபட்ட முதிர்ந்த சாதகர்களும், விருப்புக்களுக்கு அப்பார்ப்பட்டவர்களும், பல காலம் குரு சேவையில் ஈடுபட்டவர்களும், சன்னியாசிகளும்; ஆரம்ப நிலையில் நிற்கும் சாதகர்களுக்கு உதவலாம். அவர்கள் அனைவரும் சாதகர்களின் உபகுருக்களாவர். முதிர்ச்சிபெற்ற சாதகர்கள் கிடைக்கவில்லை என்றால், ஆத்மானுபூதி அடைந்த மகாத்மாக்களாம் ஸ்ரீ சங்கரர், தத்தாத்திரேயர் முதலியோர் எழுதிய நூல்களில் அடங்கியுள்ள போதனைகளைப் பின்பற்றலாம். அவ்வரிய பெருமை வாய்ந்த குருவின் திருவுருவப்படத்தைப் பக்திச் சிரத்தையுடன் அவர்கள் வழிபடலாம். மெல்ல மெல்லச் சாதகன் சுயவறிவைப் பெறுவான்; அவனது கனவில் குரு தோன்றி குறித்த நேரத்தில் தீக்ஷை அளிப்பார். உண்மையுள்ளம் படைத்தச் சாதகனுக்கு அதியற்புதமான முறையில் உதவி வந்து சேரும். சூழ்நிலைகள் அனைத்தும் அவனுக்குச் சாதகமாகவே அமைந்து, விரைவிலேயே அவன் சாந்தி, ஆனந்தம், அமரபதவியைப் பெற்றுய்வைப் பெறுகிறான்.

குருவின் போதனைகளை அப்படியே அக்ஷரம் தவறாமல் பின்பற்றிவரும் சீடன் சிறிது காலத்தில் குருவைப்போன்று ஆகிவிடுகிறான். குருவின் போதனைகளின்படி நடக்காதவன் உண்மைச் சீடன் அல்ல! குருவின் உயர் போதனைகளை உள்ளபடிச் சிரமேல் கொண்டு நிற்பதுடன் வாழ்க்கையில் இறுதிவரை தன்னிலும் எளியோரை ஆத்மீகப் பாதையில் முன்னேற உதவுகின்ற

Koviloor Digital Library

வனே உண்மைச் சீடன். அத்தகைய சாதகர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே யாவர். அவ்வரிய சாதகர்கள் வாழ்க! தன்னை அறிந்த துறவிகளும் வாழ்க !!

பிரம்மவித்யா குருக்கள், பாகவதர்கள், யோகிகள் முதலியோரின் நல்லாசிகள் உங்கள் அனைவர் மீதும் மலர்வதாக! நீங்கள் அனைவரும் இந்தப் பிறப்பிலேயே அமர ஆனந்தத்தை அனுபவிப்பீர்களாக !!



4. குருபக்தியும் குருத்துரோகமும்!

ஒழுக்கச் சிதைவு சாதகனைத் தகுதியற்றவனுக்குகிறது; சன்யாசியை இகழ்ச்சிக்குள்ளாக்குகிறது. ஆனல், காமவிகாரத்துக்கு உட்பட்டவனை சீர்திருந்துமாறு நான் எச்சரிக்கிறேன்; திருந்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை மேலும் நான் அவனுக்கு அளிக்கிறேன். சத்குருவின் ஆசிரமத்திலுள்ள சாந்தியைக் கெடுக்கத் துணியும் எந்த முயற்சியையும் நான் கடுமையாக எதிர்க்கிறேன்; ஆண்டவனின் இயக்கத்தை இழுக்காக்கி, சாதகர்களிடையே மனக் கசப்பை உண்டுபண்ணும் எந்தத் தீச்செயலையும் யாரும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஸ்தாபனத்தின் பகைவரான தீவினையாளரைக்கண்டு பிடித்து அந்தநிமிடமே அவர்களை ஆசிரமத்தைவிட்டு அப்புறப்படுத்த வேண்டுவது ஆசிரம நிர்வாகியின் கடமையாகும்.

Koviloor Digital Library
7877 R65(ஞஞ)

துர்ச்செயல்களில் ஈடுபடும் சாதகர்களுக்காக நான் வருந்துகிறேன். துறவி வாழ்க்கையைக் கொண்டுள்ளவர்களின் எவரையாவது ஆசிரமத்தைவிட்டு அப்புறப் படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை. ஆனால் களைக் களை அப்புறப்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டால் பயமின்றி அதைச் செய்வது நமது கடமையாகிறது.

இந்த மாதிரிப் பேர்வழிகளிடம் காணக்கிடைக்காதது தியாக உணர்ச்சியே யாகும். உங்களை முழுமனதுடன் தெய்விக நோக்கத்திற்காக அற்பணித்துவிட்டால், இந்த மாதிரி மோசமான நிலை ஏற்படவே செய்யாது. அரைமனமுடைய சேவைதான் சாதகர்களின் பூர்வ சம்ஸ்காரங்களில் தீயனவற்றைக்கிளறிவிட்டுப் பெரிதாக்கி அவனை வழிதவறச் செய்கிறது. இரவு பகலாக நீங்கள் வேலை செய்யலாம்; ஆனால், தியாக உணர்ச்சி பரிபூர்ணமாக உங்கள் இதயத்தில் உருவாக்கப்படாமல் இருந்தால், நீங்கள் சிரத்தையிலும் தெய்வீக வாழ்க்கையிலும் சிறந்து விளங்காமல் இருப்பதோடு, உங்கள் பாதையில் வீழ்ச்சிகள் பல சூழ்ந்திருக்கவும் செய்யவும். சரணாகதி ஒன்றே உங்கள் ஆணவத்தை அகற்றி, சாதனைவழியில் நீங்கள் முன்னேற வகை செய்யும்.

இவ்வரிய உணர்ச்சி உங்களிடம் நான்கு வளர்ந்ததும் உண்மைப் பணிவின் உயர் பெருமையை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

பணிவு, சரணாகதி ஆத்மீத் தொடர்பு எல்லாம் தொடர்புடையவை. லட்சியத்தில் முழு மனதுடன்

Koviloor Digital Library

நீங்கள் உங்களை அர்பணித்துவிட்டால்தான் குருவுடன் உட்தொடர்பு ஏற்படுத்த உங்களால் முடியும். இல்லை யேல், ஆசிரமத்தில் பலவருடங்கள் இருந்து, மாடு போல் உழைத்தும் ஆத்மீகப் பலன் சிறிதளவும் ஏற் படாமல் இருக்கும்.

அற்பத்தனமான சுய ஆட்சிகள், விருப்பு—வெறுப் புணர்ச்சிகள், ஆத்மீக வாழ்வைப்பற்றிய உங்கள் சொந்தக் கருத்துக்கள் சத்குருவுடன் அந்தரங்கத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு இடையூறு விளைவிக்கின் றன. தினமும் நீங்கள் விசாரம்செய்து, தன்னிடமுள்ள குற்றம் குறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

வேண்டாத வாக்குவாதங்களை உடனேயே விட்டு விடுங்கள். மூன்று சோம்பேறிகள், அவர்கள் சன்யாசி களாகயிருந்தாலும் கிருகஸ்தாசிரமிகளாக இருந்தா லும் சரிதான், ஒரு காபிஹோட்டலில் சந்திக்க நேரி டின் அவர்கள் பேசுவதென்ன ? கடவுள அல்லது சாதனையைக் குறித்தா பேசுகின்றனர்? மனித சமுதாய சேவை அல்லது ஆத்மானுபூதியைப்பற்றியா சம்பாஷிக் கின்றனர்? இல்லை! பின்? ....? யாரைப்பற்றியாவது பேச்சு நிலவும். ஸ்டாலின் அல்லது சர்ச்சிலைப்பற்றியோ, அல்லது ஏனைய சன்னியாசிகளைப்பற்றியோ, அல்லது ஆசிரம நிர்வாகியைக் குறித்தோ தான் சர்ச்சை செய்வர். தங்களைத் தவிர உலகிலுள்ள அத்தனை பேர் களையும் அவர்கள் குறை கூறுவர். மேலும், ஒரு குழு விலுள்ளவர் அக்குழுவை விடுத்து அடுத்த குழுவுக்குச் சென்று அதில் சேர்ந்து நிற்கும் நேரத்தில், புதிய குழு பழைய குழுவைக் கண்டிக்க முற்படும்! என்னே, அவமானம்!

Koviloor Digital Library

நீங்கள் சதா சேவையில் சுறு சுறுப்பாக இருக்க வேண்டும். **சதா வேலை செய்தவண்ணம் இருங்கள்.** சைத்தானையொத்த மனதைச் சதா தொழிலில் ஈடுபடுத்துவதன் மூலமாகத் தீமை புரிவதிலிருந்து அதைத் தடுத்து நிறுத்துங்கள். உங்களைச் சுற்றி நாலு பக்கமும் ஜோலிமயமாக இருக்கவேண்டும். ஒரு மாச வேலை உங்கள் முன் சதா பாக்கி இருத்துகொண்டே இருக்க வேண்டும்! "எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன்" என்ற எண்ணத்திற்கே இடம் இருக்கக்கூடாது; அந்த எண்ணம் வந்துவிட்டால் மனம் ஓடித்திரிய முற்படும். வேலையில்லையே என்ற சொல்லுக்கு இடமேயில்லை. சேர்ந்தார்ப்போல் இரண்டு வருடங்களாக இருபத்தி நான்கு மணிநேரமும் தொடர்ந்து தொழிலில் ஈடுபடக் கூடிய அளவுக்கு உங்களுக்கு இந்த நிமிடத்திலேயே என்னால்வேலை தரமுடியும். வேலையினால் நீங்கள் சோர்வடையமாட்டீர்கள். பலம் குன்றிவிடமாட்டீர்கள். வேலை உங்களில் புது சக்தியை நிரப்பிவிடும். உங்கள் கைகள் வேலையற்றிருக்கும்பொழுதுதான், உங்கள் மனமும் சுறுசுறுப்பாகிறது.

மனதிற்கு இடம் கொடாதீர்கள். தீய சுபாவங்கள் உங்களிடம் வளருவதற்கான வழி தோன்றி நிற்கும். உங்களால் அடக்கி நிறுத்தப்பட்ட பழைய தீய சம்ஸ்காரங்கள் மேலே தோன்றி பலம்பெற்று நிற்கும். நீங்கள் வீழ்ச்சியடைவீர்கள். உங்களுடன் மற்றவர்களையும் நீங்கள் பிடித்திழுத்துக் குழியில் விழச் செய்கிறீர்கள். உங்களுடைய குழு ஒன்றை நீங்கள் அமைத்துக்கொள்கிறீர்கள். சத்குருவைக் கவனியாது, அவரைக் குறைகூறவும் துணிகிறீர்கள். அபாயகரமானதோர்

Koviloor Digital Library

நாசக்கருவியாக நீங்கள் பரிணமிக்கிறீகள். பெருமை, பொருளுக்கான வேட்கை உங்கள் மூளையை கெடுக்கிறது. ஆசிரமத்திலுள்ள சமாதானத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்க முனைவதோடு நில்லாமல், குருவிற்கு விரோதமாகி அவரது உயரிய நோக்கத்திற்கே உலை வைக்க முற்படத் துணிகிறீர்கள் !!

இத்தகையவர் தங்கள் தீச்செயலின் விளைவைப் பற்றி எண்ணுகின்றாரில்லை. **குருத்துரோகம் மாபெரும் குற்றமாகும்; கொடும் பாபமாகும்.** குருவுக்குத் துரோகம் செய்தவன் கடைசிக் காலத்தில் மிகவும் அவதிப்படுவது திண்ணம். குஷ்டம், வாய்ப்புண் முதலிய பெரும் நோய்களால் பீடிக்கப்பட்டு, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, கவனிப்பார் யாருமின்றி பசி தாகத்தினுல் மிக வருந்தி, சீதோஷ்ண நிலைகளால் தாக்குண்டு, சித்திரவதைக்குள்ளாகி வதவதைத்து மரணமடைவர் குருத்துரோகிகள்.

குரு சேவையே சாலச்சிறந்தது. நன்றியுடைமை ஒரு அரிய பண்பு. மிருகங்கள் கூடப்பெற்றிருக்கும் இவ்வரிய அடிப்படைக் குணத்தை நீங்கள் குருவினிடம் கொண்டு விளங்கவில்லையானுல், ஆத்மானுபூதியை நீங்கள் அடைவது எப்படி ?

சேவை, சுவாத்தியாயம், தியானம் இவற்றின் மூலமாகவும், மற்றவரிடமுள்ள நன்மையைக் காண்பதாலும், பிறர் குறைகளை நினையாதிருப்பதாலும், பழைய தீய

Koviloor Digital Library

சம்ஸ்காரங்களை இல்லாதாக்குங்கள். பணிவுடைமையைக்கொண்டு குருவுக்குச் சேவை செய்யுங்கள்.

மகாத்மாக்களின் நற்றொடர்பு கிட்டுவது அரிது. அதிலும் ஒரு சத்குரு கிடைப்பதென்பது கடவுளின் திருவருளேயாகும். உண்மையான ஆத்மீக குரு கடவுளேயாவர்.

தன்னுடைய குருவின் விருப்பத்திற்கு மாறுபட்டுச் சீடன் நடக்கக்கூடாது. குருவினிடம் அவருக்குப் பிடிக்காத வார்த்தைகளைக் கூறுவது முறையல்ல.

குரு பக்தியில்லாதவன் நறுமணமற்ற பூவையும், நீரற்ற கிணறையும், பால் தராத பசுவையும், உயிரில்லா உடம்பையும் போலாவான்.

குரு பக்தியெனும் பொக்கிஷத்தை நீங்கள் ஒரே நாளில் பெறமுடியாது. மிகுந்த சிரமத்துடன் அதைச் சீடன் வளர்க்கவேண்டும்; சிறிது சிறிதாக அதிகரிக்கச் செய்ய வேண்டும். உள்ளத்தின் உள்ளே செய்யப்படும் தொடர்ந்த பிரார்த்தனையின் விளைவாகத்தான் அது வளர்கிறது. குருவின் மனிதத் தன்மைகளைச் சீடன் பார்க்கவே கூடாது. அப்பொழுதுதான் உண்மைக் குருபக்தி ஓங்கி வளரும்.

குரு சரணாகதி அவரது அருளைப் பெறுவதற்கான அதியற்புத சக்தி மிகும் முறையாகும். குருவை நீங்கள் பாராட்டும்பொழுது, அவரிடம் நீங்கள் பூரணத்துவத்தையே பார்க்கிறீர்கள். குருவின் உயர் செயல்களை உங்களால் புரிந்துகொள்ள முடியாவிடினும், அவற்

Koviloor Digital Library

றைத் தவருக எடுக்காதீர்கள். பணிவுடனும், மௌனத் துடனும், பொறுமையுடனும் இருந்து வந்தால் பிற் காலத்தில் நீங்கள் பிரகாசத்தைப் பெறுவீர்கள்.

சம்சார சாகரத்தைச் சீடன் கடந்து செல்வதற் குரிய மந்திரக்கயிறே குருபக்தி. செய்ய முடியாத வற்றையெல்லாம் செய்து தீர்க்கும் ஆற்றலுடையது குருபக்தி. பெறமுடியாததையும் குருபக்தியால் நீங்கள் பெற்றுவிடலாம்.

குருவின் தெய்வீகத் தன்மையை எண்ணி நிற்பான் உண்மைச்சீடன். அவனுக்கு குரு குருவன்றி வேறல்ல; கட்டுப்பாட்டுக்கு மாறுபட்ட முறையில் அவர் செயல் புரிந்தாலும் பரவாயில்லை! ஒரு மஹானின் நிலை அளவிடற்கரியது. அவரை மதிப்பிடாதீர்கள். உங்களி டமுள்ள அறியாமையெனும் கஜக்கோலால் அவரது தெய்வீகத்தன்மையை அளக்க முற்படாதீர்கள்.



5. குருபக்தியின் அங்கங்கள்

குருசேவை அல்லது குருவினிடமுள்ள நேசமே குருபக்தி. ஆப்தம், அங்கம், தானம், சத்பாவம் என அது நான்கு வகைப்படும்.

குருவின் வார்த்தைகளில் உறுதியான நம்பிக்கை கொண்டு அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நிற்றலே ஆப்தம்.

Koviloor Digital Library

குருவின் சரீரத்தைப் பேணுதல், அவரது உடைகளைச் சுத்தம் செய்தல், முதலிய சேவைகளில் ஈடுபடுதலே அங்கம்.

வீடு, சொத்துக்கள், செல்வம் முதலிய உடைமைகள் அனைத்தையும் அர்ப்பணித்து விட்டுக் குருவையே சரணடைவது தான் தானம்.

குருவை மனிதனாகக் கொள்ளாது, கடவுளாகக் கருதுவதே சத்பாவம்.

குருவைக் கடவுளாகக் கொண்டு வழிபட்டுவரும் சீடனிடம் திருஷ்டம், அதிருஷ்டம் எனும் இருபேறுகள் அருளப்படுகின்றன.

குரு கிருபையின்மூலம் மகா வாக்கிய உபதேசத்தினால் சீடன் பெறும் ஞானம், ஆனந்தமே திருஷ்டம். மரணத்திற்குப் பின் மறு உலகில் அனுபவிக்கப் படும் இன்பமே அதிருஷ்டம்.

உயரிய பாவத்துடன் செய்யப்படும் குரு சேவையால் ஒருவன் இருவிதப் பலன்களையும் பெறுகிறான். அதே சமயம் கடவுளை வழிபடுவதால் அதிருஷ்டத்தை மட்டுமே பெறுகிறான்.

எனவே கடவுள் எனும் உயரிய பாவத்துடன் செய்யப்படும் குருசேவையே சாலச்சிறந்தது.

கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

Koviloor Digital Library

6. குருபக்தியும் கீதையும்.

கடவுளின் அவதாரமாகத் தோன்றிய கிருஷ்ண பரமாத்மாவும் தமது குருவுக்குத் தொண்டு செய்து அவரிடம் உயர் கல்வி கற்று வந்தார். அவர் எதைச் செய்தாரோ அதையே சொன்னார். அவரது கூற்றின் விளக்கமே அவரது செயல்கள். குருவினிடம் ஒருவன் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கண்ணன் கீதையில் எப்படித் தெரிவிக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

"ஞானத்தைப் போல் பவித்திரமானதும், பெருமை, யுடையதும், சிறந்ததும் வேறு இங்கில்லை'' என்று கூறுகிறார் கிருஷ்ண பகவான். அவ்வுயரிய அறிவை நாம் பெறுவது எங்ஙனம்?

இவ்வரிய கேள்விக்குரிய விடையைத் தெரிவிக்கும் இரண்டு கூற்றுங்கள் உள்ளன. ''**சிரத்தையுடையவன் ஞானத்தைப் பெறுகிறான்.**" இந்தச் சிரத்தை எனும் பதத்தை விளக்குவது கடினம். அன்பு, நம்பிக்கை, பக்தி, ஆணவமின்மை பரிபூரண சரணாகதி எல்லாம் ஒன்றாகச் சேர்ந்ததே சிரத்தை. **ஆத்மனை நேராக உணர்ந்த மகாத்மாக்களை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதாலும், அவர்களிடம் கேள்விகள் கேட்பதாலும், அவர்களுக்குத் தொண்டு செய்வதாலும், அதை அறிக; அவர்கள் அவ்வரிய ஞானத்தை உங்களுக்குப் புகட்டுவர்''.** பிறருடைய உதவியின்றி சுய முயற்சியால் இவ்வுயர் ஞானத்தைப் பெறுவது அசாத்தியம்.

Koviloor Digital Library

குருபக்தியும் குருசேவையும் ஆத்மானுபூதியில் வந்து முடிவடைகிறது. குருவுக்குத் தொடர்ந்து நீங்கள் சேவை செய்து வரவேண்டும். உரிய காலத்தில் நீங்கள் உங்களைப் பூராவும் சரணாகதி செய்த பிறகு சத்குரு உங்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவார். ஆனால் அதைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளக்கூடாது.

விசுவரூப தரிசனத்திற்காகவும் திவ்ய சக்ஷுஸ்வைப் பெறவும் வேண்டி அர்ஜுனன் எப்படிப் பிரார்த்தித்து நின்றானோ, அதேபோல் நீங்களும் தொடர்ந்து சேவை செய்து வரும்போது, நீங்கள் முதிர்ந்த நிலையை அடையும் நேரத்தில், சத்குரு உங்களுக்கு உயர் ஞானத்தை அருளுவார். சில பிரமை பிடித்த சாதகர்கள் சில காலம் தங்கள் குருவுக்குத் தொண்டு செய்து விட்டுத் தாங்கள் சித்தசுத்தியைப் பெற்று விட்டதாகக் கருதி முட்டாள் தனமாகக் குரு சேவையை விட்டுவிடுகின்றனர். அவர்கள் உயரிய ஞானத்தைப் பெறுவதில்லை; லட்சியத்தை அடைவதுமில்லை! சிறிது புண்ணியத்தை அவர்கள் பெறுகின்றனர் என்பதில் ஐயமில்லை; ஆனால் ஆத்மானுபூதியை அடைய முடியாது; இது பெரும் நஷ்டமாகும்; பெரும் தவறாகும்.

சம்சார சாகரத்தைக் கடந்து செல்வதற்குரிய ஓடத்தின் இரு துடுப்புக்கள் தான் குருபக்தியும் குருசேவையும். இவ்விரண்டுமின்றி நீங்கள் அக்கரை சேரமுடியாது; அமரபதவியையும் நித்தியானந்தத்தையும் பெறமுடியாது. ஜீவன்முக்தனாகும் வரை இவ்விரண்டும் உங்களுக்கு மிகவும் அவசியமாகும். பிறகு

Koviloor Digital Library

குருபக்தியே ஆத்மானுபூதியாக உங்களில் வெளிப்படுகிறது; குருசேவையானது நீங்கள் தானுகவே செயல்படும் லோக சங்கிரமாகி விடுகிறது.

இத்தகைய குருபக்தியைக் கொண்டவன், குருவினிடம் முழுசாக சரணுகதி செய்தவன், குருவுக்கு முழு மனதுடன் சேவை செய்கிறவன், துன்பம், பயம், வறுமை, அறியாமை, முதலியவற்றை அறிவதில்லை; உடனேயே ஆத்மானுபூதியை அடைகிருன். ஏன்? குருவும் கடவுளும் ஒருவரேயாவர். அந்த நிமிடத்திலேயே அவன் அரிய ஞானத்தையும், சுயம்ஜோதியையும் பெற்று விளங்குகிருன். எனவே தான் உபநிடதங்களும் தெரிவித்துள்ளன:

" கடவுளிடம் சீரிய பக்தியும், அதே
தன்மையதாம் பக்தியைக் குருவினிடத்
திலும் கொண்டுள்ளதோர் மாபெரும்
மகாத்மாவுக்கே உபநிடத உண்மைகள்
படிகம் போல் தெளிவாகத் தெரிகின்றன ! "

நீங்கள் அனைவரும் குருபக்தியின் சீரிய தோற்றங்களாகப் பிரகாசிப்பீர்களாக! இந்த் ஜென்மத்திலேயே நீங்கள் அனைவரும் ஜீவன்முக்தர்களாகச் சுதந்திரத்துடன் உலாவுவீர்களாக !!

Koviloor Digital Library

7. குருபக்தியின் பிரபாவம்!

கேவல அத்துவிதக் கொள்கையின் சீரிய ஸ்தாபகரான ஸ்ரீ சங்கராச்சாரியருக்கு நான்கு சீடர்கள் இருந்தனர். அவர்கள் முறையே பத்மபாதர், ஹஸ்தர்மலகர், சுரேசுவராச்சாரியர், தோடகாசாரியர் என்று அழைக்கப் பெற்றனர்.

இந்த உண்மை கீதையின் விசவரூப-தர்சன யோகத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்படுகிறது. விசுவரூப தரிசனத்தை அர்ஜுனனுக்கு காண்பித்த பின் மறுமுறையும் அன்புமிகும் சுயவுருவம் கொண்ட கண்ணன் தெரிவிக்கிறார்: " நீ இப்பொழுது பார்த்த அதியற்புதத் தோற்றத்தைத் தேவர்களும் பார்க்க விரும்புகின்றனர்" "தேவர்களும் மகரிஷிகளும் என்னை அறிவதில்லை. ஏன்? நான் அவர்களின் உறைவிடமாக இருக்கிறேன்", என்று ஏற்கனவே பகவான் தெரிவித்திருக்கிறார்." ஆனால் அனன்ய பக்தியால் என்னை அறிய முடியும்" என்கிறார் கண்ண பெருமான். அர்ஜுனனுக்கு காட்சியளித்தது போன்று, அனன்ய பக்தி பூண்டு நிற்கும் பக்தர்களுக்குக் கடவுள் தரிசனம் தருகிறார். அப்பொழுதும் தன்னை வெளிப்படுத்துவது அவர்தான் என்ற கருத்து நினைவில் இருத்தற்குரியது. திவ்ய சக்ஷுவைப்பெற்ற பிறகுதான் அர்ஜுனனுக்குப் பகவானது விசுவரூபத்தைப் பார்க்க முடிந்தது. அதே போல் சாதகன் ஞானத்தைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றதும் "நான் அவனுக்கு புத்தியோகத்தை அளிக்கிறேன்; அவன் என்னை அடைகிறான்". "என்னிடம் அப்படியே சரண் அடையுங்கள். உங்களால் செய்ய முடிவது அவ்வளவு தான். நான்

Koviloor Digital Library

பாபங்களிலிருந்து உங்களை விடுவிப்பேன். இதை நீங்களாகவே செய்ய முடியாது. ஆனால் நான் செய்வேன், பயப்படாதீர்கள்'', என்று மிகத் தெளிவுறத் தெரிவிக்கிறார் பகவான்.

''உங்களால் சிரத்தையை மட்டுமே வளர்க்க முடியும்; நான் உங்களுக்கு ஞானத்தை அளிப்பேன். உங்களால் சரணடையவே முடியும்; நான் உங்களுக்கு விடுதலையைத் தருவேன்'', என்பதுவே பகவானின் முடிந்த கூற்று.

கீதையின் இவ்வரிய வாக்கியங்களிலிருந்து அழகியதோர் உண்மை வெளிப்படுகிறது. "சாதகனுக்கு நான் புத்தியோகத்தைக் கொடுக்கிறேன்; அவன் என்னை அடைகிறான்", என்று ஓரிடத்தில் பகவான் கூறுகிறார். ''மகாத்மாக்களிடம் செல்லுங்கள் (அவர்களே உங்களுடைய ஆத்மீக வழிகாட்டிகள்); அவர்கள் முன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யுங்கள்; அவர்களுக்குத் தொண்டு புரியுங்கள்; அவர்களிடம் வேண்டி நில்லுங்கள்; அவர்கள் உயர் ஞானத்தை உங்களுக்குப் புகட்டுவார்கள்'', என்று மற்றோரிடத்தில் பகவான் தெரிவிக்கிறார். இவ்விரு கூற்றுக்களையும் சேர்த்துப் படிக்கும்பொழுது 'குருவே உலகிலுள்ள கடவுளின் அவதாரம் என்ற பேருண்மையை நாம் காணமுடிகிறது.

கடவுளின் உருவமற்ற தன்மையில் அனன்ய பக்தியை வளர்ப்பதாலும், அல்லது அவரை உங்களின் உயர்குருவின் உருவத்தில் வணங்குவதாலும் நீங்கள் மேலே கூறிய உண்மையை, ஆத்மானுபூதியை அடைய முடியும்.

Koviloor Digital Library

இந்த முறையில் **கடவுள் சத்குருவுடன் ஒன்றித்து விளங்குகிருர்**, எனவே சாதகன் கடவுளின் உருவமற்ற தன்மையில் பக்திச் சிரத்தையைச் செலுத்துவதை விடக் கடவுளின் காணக்கூடிய தோற்றமாம் சத்குருவினிடம் பக்திச் சிரத்தை பூண்டு விளங்குதல் நடைமுறைக்கு மிகவும் பொருந்தியதாக அமையும் என்பது உறுதி.

தோடகர் மந்த புத்தியுடை மாணவராக அமைந்திருந்தாலும் ஸ்ரீ சங்கரரிடம் அதிகமான பக்தி பூண்டு விளங்கினுர். குருவுக்குத் தேவையான தொண்டுகளெல்லாம் அவரே செய்து வரலானுர். ஒரு நாள் பிரம்மசூத்திர வகுப்பு ஆரம்பமாக விருந்தது. ஆற்றிற்குச் சென்றிருந்த தோடகர் குருவின் வஸ்திரங்களைத் துவைப்பதில் சற்றே கூடுதல் காலவளவை எடுத்ததால் வருவதற்குத் தாமதமாயிற்று. மற்றுமுள்ள சீடர்கள் வகுப்பைத் தொடங்க குருவை வற்புறுத்தினர். "தோடகன் ஒரு மந்தமதியுடைய மாணவன். பிரம்ம சூத்திரத்தை அவனுல் புரிந்து கொள்ளமுடியாது. நாம் வகுப்பைத் தொடங்குவோம். சூத்திரங்களில் அடங்கியுள்ள உயர் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் தகுதியற்ற தோடகனின் வரவுக்காகக் காத்திருப்பதில் என்ன பயன்?", என்று அவர்கள் ஸ்ரீ சங்கரரிடம் தெரிவித்தனர்.

இங்ஙனம் இறுமாப்புடன் கூறிய சீடர்களுக்குப் புத்தி புகட்டக் கருதினுர் ஸ்ரீ சங்கரர். உடனேயே தம்மிடம் மிகுந்த பக்தி பூண்டு நிற்கும் தோடகர் மீது தமது அருளைச் சொரிந்தார்! அந்த நிமிடமே தோடகருக்கு விழிப்பு ஏற்பட்டது; அறிவு பிரகாசிக்கத் தொடங்கியது.

Koviloor Digital Library

"சாஸ்திரங்கள் அனைத்தினுடையவும் திவ்யவறிவின் அமிருதக்கடலே! மாபெரும் உபநிடதங்களின் உயர் பொருளைத் தாங்கள் எனக்கு வெளிப்படுத்திவிட்டீர்கள். உமது தாமரை மலர்களை எனது இதயத்தில் நான் தியானிக்கிறேன். சங்கராச்சாரியராக விளங்கும் எனது சத்குருவே! எனது அடைக்கலம் நீர்தான். ஜீவசுவர ஒருமைப்பாட்டைக் கண்டுபிடித்த உம்மையே நான் தியானிக்கிறேன். நீரே என் கடவுள். ஆதலால் நான் ஆனந்தமயமாக இருக்கிறேன். என்னிடத்திலிருந்த மோகக் கடலைத் தாங்கள் வற்றவைத்து விட்டீர்கள். ஆத்மீக வழிகாட்டியே! வெகுநாட்கள் நான் செய்த மாபெரும் நற்செயல்களின் விளைவாகத் தங்களின் தாமரைத் திருப்பாதங்களிடத்தில் அடியேனுக்கு அன்பு தோன்றி நிற்கிறது. எனது ஆத்மீகத் தந்தையே! சத் குருவே!! எளியோனைக் காத்தருள்வீராக!!!", என்றிவ் வண்ணம் உயரிய நடையில் அமையும் அருள் பாடல்களைப் பாடியவாறு வகுப்பினுள் நுழைந்தார் தோடகர்.

பத்மபாதரும் மற்றவரும் ஆச்சரியத்துடன் தோடகரை நோக்கி நின்றனர். அந்த நிமிடமே அவர்களின் கர்வம் அடங்கியது.

குரு சேவையே மிகச்சிறந்த வரப்பிரசாதம். குரு சேவையே சம்சார சாகரத்தைக் கடப்பதற்குரிய ஓடம். குருதான் பிரம்மா, விஷ்ணு, சிவன், பிரம்மன்! சத் குரு மஹராஜ்ஜய்! பிரம்ம வித்யா குருக்களின் நல்லாசிகள் உங்கள் அனைவர் மீதும் மலர்வதாக!!

Koviloor Digital Library

8. உபமன்யுவின் குருபக்தி!

"என் குழந்தாய்! சென்றுவா!! என் பசுக்களைப் பாதுகாத்து வருவாய்!", என்று ரிஷி அயுததௌம்யர் தமது சீடன், உபமன்யுவிடம் கூறினர். பகற்காலத்தில் பசுக்களை மேய்த்துவிட்டு, இரவில் குருவைக் காணச் சீடன் வந்தான். "உபமன்யு! எதை உண்டு நீ வாழ்கிருய்? நீபருமனுக இருக்கிருயே!", என்று கேட்டார் தௌம்யர். "நான் பிச்சை எடுத்து உண்டேன்", என்ருன் உபமன்யு. "பிச்சை எடுத்துக் கிடைப்பதை எனக்குக் கொடுக்காமல் நீ எப்படிப் புசிக்கலாம்? கூடாது. நீ பிச்சை யெடுத்துக் கிடைக்கும் உணவு என்னைச் சேர்ந்தது", என்று கூறினர் தௌம்யர்.

அடுத்த நாள் பிச்சையால் கிடைத்த உணவைக் கொண்டு வந்து சீடன் குருவினிடம் கொடுத்தான். குரு பூரா உணவையும் தனக்கென வைத்துக் கொண்டார்! சீடனுக்குச் சிறிதளவு கூடக் கொடுக்கவில்லை!! அன்று மாலை உபமன்யுவைக் கண்ட குரு ஏதாவது உணவை அருந்தினுயோ என்று அவனிடம், கேட்டார். "ஆம். இரண்டாம் முறையாக பிச்சை எடுத்துக் கிடைத்ததை நான் உண்டேன்", என்ருன் உபமன்யு. "அது சரியல்ல. இரண்டாம் முறை பிச்சைக்குச் செல்வதால் மற்றுமுள்ளவரின் உணவை நீ அபகரித்தவனுகிருய். பேராசை படைத்தவனுக நீ இருக்கிருய்", என்று குரு சொன்னர். பசுக்களை மேய்க்கச் சென்ருன் உபமன்யு.

அடுத்த நாள் மாலையும் சீடன் நல்ல தெம்புடன் இருப்பதைக் கண்ட குரு அவன் அன்று உண்ட விதத்

Koviloor Digital Library

தைத் தெரிவிக்கக் கேட்டார். இத்தப் பசுக்களிலுள்ள பாலைக் குடித்தேன்", என்றான் உபமன்யு. "இந்தப் பால் என்னுடையதல்லவா? என் உத்தரவின்றி இந்தப் பாலை குடிப்பது முறையன்று", என்கிறார் தௌம்யர்.

மறுநாள் மாலை சீடன் முன்போல் தடித்துத் தெம்புடன் இருக்கக்கண்ட குரு, உபமன்யு! பிச்சை எடுத்தோ, பசுக்களின் பாலைக் குடித்தோ நீ வாழவில்லை. ஆனால் நீயோ தடித்துக் கொழுத்திருக்கிறாய்! இப்பொழுது நீ எப்படிக் காலக்ஷேபம் செய்கிறாய்?' என்று கேட்டார் குரு.

"குருமஹாராஜ்! கன்றுகள் தாய்ப்பாலை உண்ணும் போது வெளிவரும் நுரையைப் பருகினேன்", என்று கூறினான் சீடன். "நல்ல கன்றுகள் உன்மீதுள்ள கருணையால் அதிகமான நுரையை வெளித்தள்ளுகின்றன. அவர்களின் முழு உணவில் நீ குறுக்கிடக் கூடாது. மேலும் நுரையைப் பருகுவது முறையுமல்ல என்பதை அறிவாய்", என்றார் குரு. இதைக்கேட்டுத் தலை அசைத்து விட்டுப் பசுக்களை மேய்க்கச் சென்றான் உபமன்யு.

பிச்சை எடுத்தோ, பாலைக் குடித்தோ நுரையைப் பருகியோ, வாழ முடியாத நிலையில், உபமன்யுவுக்கு உண்பதற்கு ஒன்றுமே கிட்டவில்லை. பசியோ அவனை மிகவும் வாட்டியது. காட்டிலுள்ள எருக்குச் செடியின், இலைகளைப் பறித்துத் தின்னலானான். எருக்கிலையின் காரணத்தினாலும் எரிச்சலினாலும் அவனது இரு கண்களும் குருடாகி விட்டன. அங்குமிங்கும் கண்தெரியாமல்

Koviloor Digital Library

அலைந்த உபமன்யு ஒரு கிணற்றினுள் கால் தடுக்கி விழுந்துவிட்டான்.

இரவாகியும் அன்று உபமன்யு தமது ஆசிரமத்திற்கு வந்து சேராததால், அவனைத் தேடச் சொல்லிச் சீடர்களை ஆங்காங்கு அனுப்பியதுடன், "உபமன்யு! எங்கிருக்கிறாய்? என் குழந்தாய்! இங்கே வா!!", என்று உச்சத்தில் கூறினார் ரிஷி தௌம்யர்.

குருவின் கூக்குரலைக் கேட்ட சீடன், "நான் இந்தக் கிணற்றினுள் விழுந்து கிடக்கிறேன்", என்று தெரிவித்தான். "எப்படி இதனுள் விழ நேரிட்டது?", என்று குரு கேட்கச் சீடன் தான் விழ நேரிட்ட காரணத்தைத் தெளிவாகத் தெரிவித்தான். "அசுவினி தேவர்களைத் துதி செய்வாயாக. தேவ வைத்தியர்களான அவர்கள் உன் குருட்டுத்தனத்தைப் போக்கிக் கண்கள் தெரியும்படிச் செய்வர்", என்றார் குரு.

ரிக் வேதத்திலுள்ள கீழ்வரும் வாக்கியங்களைக்கூறி உபமன்யு அசுவினி தேவர்களைத் துதி செய்யலானான்:-

"நீங்களே அனைவருடையவும் பெற்றோர். அசுவினிகளே! உங்களை நான் வழிபடுகிறேன். நீங்கள் எல்லையற்றவர். கேள்வி ஞானத்தாலும் தியானத்தினாலும் உங்களைப் பெற நான் விரும்புகிறேன். காலச்சக்கரத்திலிருந்து என்னை விடுவியுங்கள். பஞ்சபூதங்களின் பிடியிலிருந்து என்னை உயர்த்துங்கள். நீங்களே உயரிய பிரம்மன். அசுவினி தேவர்களே! எனது குருட்டுத் தனத்தைப் போக்கி என்னைக் காப்பாற்ற வேண்டுகிறேன்."

Koviloor Digital Library

அசுவினி தேவர்கள் இருவரும் உபமன்யுவின் முன் தோன்றி, "உனது பக்தியைக் கண்டு திருப்தி யடைந்தோம். இதோ உனக்கு ஒரு அப்பத் துண்டு. இதை எடுத்துப் புசிப்பாயாக," என்று தெரிவித்தனர். "அசுவினிகளே! இதை எனது குருவினிடம் கொடுத்து அவர் எனக்குத் தந்தாலன்றி நான் இதைப் புசிக்கமாட்டேன்", என்று பதில் கூறினான். "ஒரு தடவை உனது குருவும் எங்களை வரவழைத்தார். இதே மாதிரி அவருக்கும் நாங்கள் ஒரு அப்பத்தைக் கொடுத்தோம். ஆனால் அவர் அவருடைய குருவுக்குக் கொடுக்காமலே யே புசித்தார். அவர் செய்ததையே நீயும் செய்வாயாக? என்றனர் அசுவினி தேவர்கள். குரு பக்தியில் திளைத்த உபமன்யு, "தேவர்களே! மன்னிக்க வேண்டுகிறேன். இந்த அப்பத்தை எனது குருவுக்குக் கொடுக்காமல் நான் புசிக்கமாட்டேன்",என்று கண்டிப்பாகத்தெரிவித்து விட்டான்! "உனது குருபக்தியைக் கண்டு மெச்சி னோம். உனது குருவின் பற்கள் கருஇரும்பாலாகியவை; உனது பற்கள் தங்கத்தாலாகி விடும். உனது பார்வை யை நீ திரும்பப் பெறுவாயாக. மேலும் நல்ல செல்வத் தையும் பெற்று விளங்குவாயாக", என்று உபமன்யுவை ஆசீர்வதித்துச் சென்றனர் அசுவினி தேவர்கள்.

உபமன்யு அவனது பார்வையைத் திரும்பப் பெற்றுப் பெருமகிழ்வெய்தினான். நேராகக் குருவினி டம் ஓடோடியும் சென்று, நமஸ்கரித்து, நடந்தவற்றை விளக்கமாகக் கூறினான். சீடனின் குருபக்தியைக் கண்டு பேரானந்தமடைந்த குரு தௌம்யர் அவனை வாழ்த்தி, அசுவினி தேவர்களின் சொல்படி பெரும்

Koviloor Digital Library

செல்வத்தைப் பெற்றுப் பேரின்பமாய் வாழ்வாயென மறுமுறையும் வாழ்த்தினர்.

"வேதங்கள் எல்லாம் உன்மீது பிரகாசிக்கட்டும்; அதேபோல் தர்மசாஸ்திரங்களின் ஜோதியும் உன்மீது வீசிப்பரவுமாக. என்றுமேலும் ஆசீர்வதித்தார் குரு. குருவின் திருவருளைப் பெற்ற உபமன்யு இல்லற வாழ்க்கையில் இனிது புகுந்து பெயரும் புகழும் பெற்று விளங்கலானன்.

உபமன்யுவின் பெரும் பொறுமையை என்னென்று உரைப்பது! ஒரு வேளைச் சாப்பாடு கொடுக்கப்பட வில்லை என்ருலோ, ஒரு நாளைக்குக் காலைத் தேநீரோ அல்லது பாலோ நிறுத்தப்பட்டாலோ, கொடுக்கப்படும் பாலின் அளவு சிறிது குறைந்தாலோ, சீடர்கள் சகிப்புத் தன்மையை இழந்து ஆசிரமத்தையும் குருவையும் விட்டு விட்டு வேறிடம் சென்று வேறு நபரைக் குருவாகக் கொள்ள முற்படுகின்றனர்! அதனல்தான் இந்தக்காலச் சீடர்கள் ஆத்மீகப்பாதையில் முன்னேற்றமடைவதில்லை. தீய சுபாவங்கள் நிறைந்த சீடன் இருபது வருடங்கள் முன்னல் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பிவந்த நிலையிலும் கீழ்த்தரமான நிலையில் இருந்து வருவதைக் காண வருந்த வேண்டியதைத் தவிர வேறென்னதான் செய்வது?! இந்த உலகம் உபமன்யு, ஆருணி போன்ற குருபக்தி மிகும் சீடர்களை வேண்டுகிறது.

உண்மைச் சீடர்கள் அனைவருக்கும் ஜே!!



7877
R65(குரு)
Koviloor Digital Library

மகாகுருவின் மணிமொழிகள்.

1. குருவுக்கு சேவை செய்கிறவன் அகில உலகிற்கும் தொண்டு செய்தவனாகிறான்,

2. குருசேவையே மிகச் சிறந்த சாதனை.

3. குருத் தியானமே கடவுள் தியானம்.

4. தன்னலத்தை நிறைவேற்றக் குருவை ஏமாற்றாதீர்கள்.

5. உங்கள் குருவைக் கோர்ட்டுக்கு இழுக்காதீர்கள்.

6. குருவினிடப் குறைகாண முயலுவது மாபெரும் பாபமாகும்.

7. சீடனின் அணிகலன் பணிவுடைமையாகும்.

8. குருவைத் திருப்தி செய்கிறவன் இஷ்ட தெய்வத்தைத் திருப்தி செய்கிறான்.

9. காமவெறி, பேராசை, கோபம் இவை குரு சேவைக்கு இடையூறுகளாக அமைகின்றன.

10. இந்தக் கலியுகத்தில் கடவுளை அடைவதற்கான சீரிய யோகம் குரு சேவையாகும்.

11. குருசேவையால் அறிவு தோன்றுகிறது.

12. குருகிருபையைப் பெற்றவன் மரணத்தை வெல்கிறான்.

கோவிலூர் மடாலயம் KOVILOOR MADALAYAM
